பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

12 08 2024 **MONDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தின் கீழ் ஜம்மு காஷ்மீரில் பொதுமக்கள் பங்கேற்றுள்ள நிகழ்ச்சிகள் உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. இளையோரின் சக்தி மற்றும் அர்ப்பணிப்பு, வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க உதவிடும் என்று மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
3. நாட்டின் தொழில்துறை உற்பத்தி கடந்த ஜூன் மாதம் 4 புள்ளி இரண்டு சதவீத வளர்ச்சியை கண்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
4. இந்தியாவும் நேபாளமும் பல்வேறு துறைகளில் பரஸ்பரம் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதென முடிவு செய்துள்ளன.
5. பாரிஸ் பாராலிம்பிக் போட்டிகளில் இந்தியாவின் சார்பில் 84 பேர் பங்கேற்கின்றனர்.

**<<<<<>>>>>>**

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தின்கீழ் ஜம்மு காஷ்மீரில் பொதுமக்கள் பங்கேற்றுள்ள நிகழ்ச்சிகள் உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த இயக்கத்தின் வெற்றிக்காக ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா மேற்கொண்டுள்ள பணிகள் பாராட்டுதலுக்குரியது என்று குறிப்பிட்டுள்ளார்.

நாடுமுழுவதும் இந்த இயக்கத்தில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

விழிப்புணர்வு பேரணிகள் மற்றும் உலக சாதனைகளுக்கான நிகழ்ச்சிகளும் இந்த இயக்கத்தின் கீழ் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையே, நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் தில்லி செங்கோட்டையில் பறந்த முதல் தேசியக்கொடி வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் தயாரிக்கப்பட்டது குறித்து அம்மாவட்ட மக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

( வாய்ஸ் பைட் – வேலூர் 53 செகண்ட்ஸ் )

குடியாத்தம் என்றாலே தேசியக்கொடி தான் நினைவுக்கு வருவதாக இந்த மாவட்டத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வாரிசுகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – வாரிசுகள் 47 செகண்ட்ஸ்)

**<<<<<>>>>>>**

இளையோரின் சக்தி மற்றும் அர்ப்பணிப்பு, வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க உதவிடும் என்று மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

சர்வதேச இளையோர் தினத்தை ஒட்டி, குஜராத் மாநிலம், அஹமதாபாதில் நடைபெற்ற மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

இந்தியாவை அடுத்த 23 ஆண்டுகளுக்குள் வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடி செயல்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் அடிப்படையிலேயே, இளையோர் நலனுக்கான திட்டங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

‘அன்னையின் பெயரில் ஒரு மரம் நடுவோம்’ இயக்கத்தில் இளையோர் ஆர்வத்துடன் பங்கேற்க வேண்டும் என்றும் திரு. மன்சுக் மாண்டவியா கேட்டுக் கொண்டார்.

<<<<<>>>>>

கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களின் விற்பனை மற்றும் ஏற்றுமதியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கைவினைப் பொருட்களுக்கான புதிய வடிவமைப்பை உருவாக்குவதற்கான பணிகளில் தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப மையம் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார்.

கைத்தறி துறையை பொறுத்தவரை உலக அளவில் இந்தியாவின் பங்கு 90 சதவீதமாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

35 லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கைத்தறி நெசவுத்தொழில் ஈடுபட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தின் ஒரு பகுதியாக, தேசியக்கொடிகளையும் கைவினைக் கலைஞர்களுக்கு அவர் வழங்கினார்.

இந்த இயக்கத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் திரு. கிரிராஜ் சிங் கேட்டுக் கொண்டார்.

<<<<<>>>>>

நாட்டின் தொழில்துறை உற்பத்தி கடந்த ஜூன் மாதம் 4 புள்ளி இரண்டு சதவீத வளர்ச்சியை கண்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் இது நான்கு சதவீதமாக இருந்தது என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>

தேசிய அளவில் சிறந்த உயர் கல்வி நிறுவனங்களுக்கான தரிவரிசைப் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் இதனை வெளியிட்டார்.

இதன்படி, ஒட்டுமொத்த பிரிவில் சென்னை ஐ.ஐ.டி முதலிடத்தைப் பிடித்தது.

சிறந்த பல்கலைக் கழகத்திற்கான பட்டியலில் பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கழகமும், கல்லூரிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் தில்லி **Hindu** கல்லூரியும் முதலிடத்தை பிடித்தன.

ஒட்டு மொத்தப் பிரிவில் சென்னை ஐ.ஐ.டி தொடர்ந்து முதலிடத்தில் நீடிப்பதற்கு மாணவர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட அனைவரின் செயல்பாடுகளே காரணம் என்று அதன் இயக்குநர் பேராசிரியர் காமகோடி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட — காமகோடி 45 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>

இந்தியாவும் நேபாளமும் பல்வேறு துறைகளில் பரஸ்பரம் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதென முடிவு செய்துள்ளன.

அரசுமுறைப் பயணமாக நேபாளம் சென்றுள்ள வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி, அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் **Arzu Rana Deuva**–யுடன் இன்று காத்மண்டுவில் நடத்திய பேச்சுக்களின் போது இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

அனைத்து துறைகளிலும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதென இந்த பேச்சுக்களின் போது தீர்மானிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, நேபாளத்தின் வெளியுறவுத்துறை செயலர் திருமதி. **Sewa Lamsal** –லுடன் திரு. விக்ரம் மிஸ்ரி பேச்சு நடத்தினார்.

**<<<<<>>>>>>**

வளர்ச்சியடைந்த இந்தியாவின் இலக்குகளை எட்ட மத்திய-மாநில அரசு துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை அமைச்சர் திரு. ராவ் இந்திரஜித் சிங் கூறியுள்ளார்.

மத்திய-மாநில அரசுகளின் புள்ளியியல் அமைப்பின் பிரதிநிதிகள் பங்கேற்ற மாநாட்டினை இன்று புதுதில்லியில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

கொள்கைகளை வகுப்பதிலும் திட்டங்களை செயல்படுத்துவதிலும் புள்ளிவிவரங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக அவர் கூறினார்.

புள்ளி விவரங்களை சேகரிப்பது தொடர்பான பணிகளை மேலும் மேம்படுத்துவது குறித்து இந்த இரண்டு நாள் மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளதாகவும் திரு. ராவ் இந்திரஜித் சிங் தெரிவித்தார்.

**<<<<<>>>>>>**

போதைப்பொருளுக்கு எதிராக உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி, நாடு முழுவதும் இன்று நடைபெற்றது.

10 ஆயிரத்திற்கு மேற்பட்ட இடங்களில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சிகளில் 1 கோடிக்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாக மத்திய அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அவர், போதைப்பொருளினால் ஏற்படும் தீமைகள் குறித்து 11 கோடிக்கும் மேற்பட்டோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இதில் 3 கோடிக்கும் மேற்பட்டோர் இளையோர் என்றும் டாக்டர் வீரேந்திர குமார் கூறினார்.

**<<<<<>>>>>>**

பாரிஸ் பாராலிம்பிக் போட்டிகள் வரும் 28ஆம் தேதி தொடங்குகின்றன.

இந்தியாவின் சார்பில் 84 பேர் இதில் பங்கேற்கின்றனர்.

முதல்முறையாக 11 விளையாட்டுப் பிரிவுகளில் இந்தியா பங்கேற்கிறது.

**<<<<<>>>>>>**

இங்கிலாந்து ஓப்பன் ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Sugi Sai Bala Singa Gopinath Singh** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**<<<<<END>>>>>>**